## இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் - 2015

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்தும் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளினது வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2016 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு

கூட்டுத்தாபனத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை மூலதனம், வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடயம் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 270,128,140 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 456,920,410 |
| மொத்தச் சொத்துக்கள் | 727,048,550 |

| | |
|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 49,192,830 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 92,139,508 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 141,332,338 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | 585,716,212 |
| | -------------------- |
| மொத்தம் | 727,048,550 |
| | ======== |
| மொத்த வருமானம் | 148,671,246 |
| மொத்தச் செலவினம் | (134,197,222) |
| | ------------------- |
| வரிக்கு முன் மிகை | 14,474,024 |
| வருமான வரி | (6,505,596) |
| | ---------------- |
| வரிக்குப் பின்னரான மிகை | 7,968,428 |
| | ======= |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | 2014 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 166,665,142 பெறுமதியுடைய ஆதனங்கள், பெறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நிலையான சொத்துக்கள் பதிவே டொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 மே 25 ஆந் திகதிய PED/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளருக்கு உரித்தான ரூபா 30,000 ஆன மாதாந்த போக்குவரத்துப் படிகளுக்குப் பதிலாக சாரதியுடன் ரூபா 70,000 ஆன மாதாந்த போக்குவரத்துப் படியொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், 2015 மார்ச் முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்த போக்குவரத்துப் படிகள் ரூபா 240,000 ஆக இருந்தது. |
| (இ) | 2002 செப்தம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.11 | பெறுமதி சேர் வரிக்காக பதிவிலக்கம் குறிப்பிடாத 30 பேரின் பட்டியல்களுக்காக ரூபா 266,201 தொகை உட்பட மீளாய்வாண்டில் ஒப்பந்தக்காரர்களுக்கும் வழங்குனர் களுக்கும் செலுத்தப்பட்டிருந்த |

மற்றும் 5.4.12

பெறுமதி சேர் வரி ரூபா 1,123,720 தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1969 மே 11 ஆந் திகதிய 14853/3 ஆம் இலக்க இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தல், வியாபாரத்தை மேற்கொள்ளல் சித்த மற்றும் யூனானி போன்ற அத்தியவசிய ஆயுர்வேத மருந்து வகைகளை இறக்குமதி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தல். உள்நாட்டில் உற்பத்தி செய்யும் உலராத ஆயுர்வேத மருந்து வகைகளை கொள்வனவு செய்தல் மற்றும் அம் மருந்துகளை தயாரித்தல் ஆயுர்வேத மருந்துகளை ஆராய்ச்சி செய்தல் மற்றும் அவ்வாறான மருந்து வகைகளை நியமப்படுத்துதல், ஆயுர்வேத மருந்து தொழிற்சாலைகளை பராமரித்தல் மற்றும் மருந்து வகைகளின் உற்பத்திக்காக தேவையான ஆயுர்வேத மருந்துகளது உள்ளூர் மருந்து வகைகளை உற்பத்தி செய்தல் போன்ற பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான தூய நெய்யை உற்பத்தி செய்வதற்கான தூய பசும்பாலை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பால் பண்ணைகளை பராமரித்தல், மருந்துகளை தயாரிப்பதற்குத் தேவையான தேன் உற்பத்தி மற்றும் தேனீக்கள் வளர்ப்பினை வீட்டுக் கைத்தொழிலொன்றாக அபிவிருத்தி செய்தல் போன்ற பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கும் தேவையான உலராத மற்றும் உலர்த்திய மருந்துகளை வழங்குவதற்கு பொருத்தமான மற்றும் போதியளவு வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டு செயற்படுத்தப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 398,407,958 மதிப்பிடப்பட்ட கிரயத்திலான 136 மருந்து வகைகளுக்கான உற்பத்தி இலக்குகளில் ரூபா 131,790,562 கிரயத்திலான 90 மருந்து வகைகள் 6 சதவீதத்திலிருந்து 73 சதவீதம் வரையான வீச்சில் பூர்த்திசெய்து கொள்வதற்கு தவறியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக 13 மருந்து வகைகள் உற்பத்தி முழுமையாக கைவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக அரச மற்றும் தனியார் துறையினரின் மதிப்பிடப்பட்ட வருடாந்த மருந்துகளுக்கான கேள்வியில் முறையே 20 சதவீதம் மற்றும் 30 சதவீதம் விற்பனைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்படாமல் அதன் பேரில் உற்பத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமையால் கேள்விக்கு ஏற்ற உற்பத்தியொன்றை மேற்கொள்வதற்கு திட்டம் தயாரிக்கப்படாதிருந்தமை கண்டறியப்பட்டது. அதன் காரணமாக, மீளாய்வாண்டில் அரச துறையினால் கோரப்பட்டிருந்த முழு மருந்துகளின் கேள்வியை வழங்குவதற்கு தவறியிருந்ததுடன் இழக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 111,611,080 ஆக இருந்தது. தனியார் துறையினரின் உள்ளவாறான கேள்வி, விற்பனை அலகு அளவு மற்றும் பெறுமதியைக் கணக்கிடுவதற்கு கூட்டுத்தாபனத்தினுள் தகவல்கள் மற்றும் தரவுகள் பேணப்படாமல்

இருந்தமையால் அப்பிரிவிலிருந்து இழக்கப்பட்டிருந்த வருமானம் தொடர்பாக அவதானிப்புக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாதிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த விற்பனை திட்டத்தின் பிரகாரம் அரச துறையினரிடமிருந்து எதிர்பார்த்த மொத்த விற்பனை வருமானம் 102 சதவீதத்தினால் அடையப் பெற்றிருந்த போதிலும் ஒவ்வொரு மருந்தினதும் எதிர்பார்த்த விற்பனை அலகு மற்றும் உள்ளவாறான விற்பனை அலகு என்பவற்றை ஒப்பிடுகையில் அடையப் பெறாத சதவீதம் 2 முதல் 100 வரையான வீச்சில் காணப்பட்டது. தனியார் துறையின் உள்ளவாறான விற்பனை அலகுகளை கணக்கிடுவதற்கு கூட்டுத்தாபனத்தில் தகவல் மற்றும் தரவுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(உ) சந்தையில் அதிக கேள்வியைக் கொண்டுள்ள 5 மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஔடதங்களான அபினை வழங்குவதற்கு பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்படாமை காரணமாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அம்மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், இரண்டு ஆண்டுகளில் இழக்கப்பட்டிருந்த எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம் முறையே ரூபா 30,102,700 மற்றும் ரூபா 25,079,250 ஆக இருந்ததுடன், இழக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட இலாபம் முறையே 10,916,033 மற்றும் ரூபா 10,705,530 ஆக இருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் பிரச்சாரச் செலவினம் ரூபா 9,587,884 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 255 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் உள்ளவாறான விற்பனை வருமானம் ரூபா 521,697,767 ஆக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 17 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்திருந்தது.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதுடில்லியில் உள்ள உலக சுகாதார ஸ்தாபன அலுவலகத்தில் உள்நாட்டு வைத்திய நடவடிக்கைகளுக்காக அலுவலகம் ஒன்றைப் பெற்று அதன் பழுதுபார்த்தல் மற்றும் உபகரணக் கொள்வனவு என்பவற்றிற்கு 2012 ஒக்டோபர் 15 ஆந் திகதியன்று வெளிவிவகார அமைச்சிற்கு ரூபா 3,000,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்படும் காணி ஒன்றில் 2009 ஆம் ஆண்டில் ரூபா 1,808,795 செலவில் பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டிருந்ததுடன் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட இக்காணியினது சட்டபூர்வ உரித்தைச் சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டு டிசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான உடன்படிக்கையொன்றில்லாமல் ரூபா 950,000 ஆரம்ப வாடகைப் பெறுமதியில் ரூபா 475,000 முற்பணமாக செலுத்தப்பட்டு புறக்கோட்டை மிதக்கும்

வர்த்தக தொகுதியிலிருந்து வாடகைக்கு பெற்றுக்கொண்ட விற்பனை கூடம் 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை அங்கீகாரமில்லாது கூட்டுத்தாபனத் தலைவரின் தீர்மானத்தின் பேரில் 2015 பெப்ரவரி மாதத்தில் மூடப்பட்டிருந்த போதிலும் விற்பனை கூடத்தை வாடகைக்குப் பெறும் போது செலுத்திய ரூபா 475,000 முற்பணத்தில் ரூபா 95,000 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வருடாந்த இருப்பு மெய்மையாய்வு மூலம் இனங்காணப்பட்டிருந்த ரூபா 10,119,127 ஆன இருப்பு மிகை மற்றும் ரூபா 7,291,205 ஆன இருப்பு பற்றாக்குறை தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 103 இன் பிரகாரம் 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 10 புதிய ஆயுர்வேத உற்பத்திகளை திறந்த சந்தையில் அறிமுகப்படுத்தி பிரசித்தப்படுத்தும் செயற்திட்டத்தின் முதலாம் கட்டமாக ரூபா 7,521,992 செலவிடப்பட்டு இசிவர ஒசு தொரட வெடிம என்ற பெயரில் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்த விழாவின் செலவினத்தினது 71 சதவீதம் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் பழைய 09 ஆயுர்வேத மருந்து உற்பத்திகளும் புதிய உற்பத்தியொன்றும் மாத்திரமே அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) 1973 மருந்துகள் கட்டளை இலக்கம் 21 இற்கு முரணாக சூத்திரக்குழுவினால் அங்கீகரிக்கப்படாத சூத்திரம் ஒன்று பயன்படுத்தப்படாமல் 2015 ஆம் ஆண்டின் போது 06 பதிய உற்பத்திகள் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

(உ) தேவைகளை இனங்காணாமல் 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த வைன் போத்தல் மற்றும் கிரல மூடிகளின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 844,283 பெறுமதியான 20,678 வைன் போத்தல்களும் ரூபா 445,000 பெறுமதியான 20,000 கிரல மூடிகளும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன.

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

கைப்பிரசுரங்களது அச்சிடல் கோரிக்கைத் தினம், அச்சிடுவதற்கென அங்கீகரிக்கப்பட்ட திகதி, கொள்வனவு கட்டளைத் திகதி, கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு இலக்கம், பொருள் பரீட்சிக்கப்பட்ட திகதி மற்றும் பொருள் பெறுவனவு பத்திரத்தில் உள்ள திகதி போன்ற அனைத்தும் ஒரே திகதியாக இருந்தமையால் வழங்குனரிடமிருந்து பொருள் ஒப்படைப்பு பத்திரத்தின் திகதி மற்றும் அதற்குரிய பட்டியல் திகதி அதற்கு முன்னரான திகதியாக இருந்தமை போன்ற விடயங்கள் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 238,000 செலவிடப்பட்டு கைப்பிரசுரங்கள் மற்றும் வரவேற்பு கடித உரைகள் இருப்பை அச்சிடுவதற்கான கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற மற்றும் வெளிப்படையில்லாத கொடுக்கல் வாங்களாக இருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

### 3.5 கொள்வனவு மற்றும் ஒப்பந்த செயற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உத்தியோகத்தர்களின் போக்குவரத்திற்கான வாகனமொன்றில் இருக்க வேண்டிய விதந்துரைகள் முழுமையாகவிருந்த 2,950 CC என்ஜின் இயலளவுடைய அனைத்து வரிகளுடன் ரூபா 6,986,482 இறக்குமதி கிரயத்திலான 16 இருக்கைகளுடனான வாகனமொன்றை ரூபா 7,900,000 இற்கு கொள்வனவு செய்வதற்கு கூறு விலை

சமர்ப்பிக்கப்பட்டிருக்கையில் அதற்குப்பதிலாக 2,488 CC என்ஜின் இயளலளவு உடைய அனைத்து வரிகளுடன் ரூபா 5,311,118 இறக்குமதி கிரயமான 16 இருக்கைகளுடனான வாகனமொன்று ரூபா 7,900,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொடுக்கல் வாங்கல் தொடர்பான பெறுகை செயற்பாட்டின் வெளிப்படையான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் குழாம் போக்குவரத்து வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கொள்வனவு செய்யப்பட்ட வேன் வண்டியின் அனைத்து இருக்கைகளும் கழற்றி அகற்றப்பட்டு விற்பனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விதந்துரைப்புகளை ஒப்பிடாமலும் கேள்விதாரரின் பின் தகைமைகளை பரீட்சிக்காமலும் சேவை மற்றும் பராமரிப்பு கிரயத்தின் தற்போதைய தேறிய பெறுமதி என்பவற்றை கருத்திற் கொள்ளாமலும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து மீளாய்வாண்டில் ரூபா 14,832,560 மொத்த கிரயத்திலான 05 உற்பத்தி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ் இயந்திரங்களின் சேவை நடவடிக்கைகளுக்காக முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 2015 நவம்பர் மாதத்தில் பொருத்தப்பட்ட அந்த இயந்திரங்களில் மருந்துகளை ஒரே தடவையில் பாரியளவு உட்புகுத்த முடியாதிருந்தமை, சரியான கலவை இல்லாமை, விரைவில் ஒட்டாமை, கலவை செய்யப்பட்ட பொருட்களை மீள வெளியே எடுப்பதற்கு அதிக காலம் சென்றமை மற்றும் செயற்படுத்துவதற்கு 05 ஊழியர்கள் தேவையாக இருந்தமை போன்ற பல்வேறு காரணங்களால் 2016 செப்தெம்பர் மாதம் வரையில் அதில் ரூபா 7,206,327 கிரயத்திலான 2 இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமலும், மூலம் பொருட்கள் வெளியே வீசப்படல், இயலளவு குறைந்த மட்டத்தில் காணப்படல், செயற்படுத்தும் போது அதிக சத்தம் மற்றும் இரைச்சல் ஏற்படுதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் ரூபா 4,296,476 தொகையான 03 இயந்திரங்கள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டின் போது பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டிருந்த வியாபார கண்காட்சி கூடமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 551,947 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இக் கொடுக்கல் வாங்கல்களுக்காக பெறுகை செயற்பாடு பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 10 முகாமைத்துவப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பகிரங்க அறிவித்தல்களை வெளியிடுவதன் மூலம் விண்ணப்பங்களை கோருவதற்கோ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையொன்றை நடாத்துவதற்கோ நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத 41 பதவிகளும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள 16 பதவிகளும் ஒப்பந்த அடிப்படையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத 03 பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையிலும் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(இ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றியும் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையில்லாமலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத சிவில் பொறியியலாளர் பதவிக்காக 2015 மே 01 ஆந் திகதி முதல் ஓராண்டு காலப்பகுதிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவருக்கு

முறையான நியமனக் கடிதமொன்றும் கடமை கையளிப்பு வழங்கப்படாமலும் மாதமொன்றுக்கு ரூபா 85,000 வீதம் 2015 மே முதல் 2015 நவம்பர் வரையான காலப்பகுதியில் ஊதியம் மற்றும் படிகளாக மொத்தம் ரூபா 555,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 நவம்பர் மாதத்தின் பின்னர் சேவைக்கு வருகைதராத இந்த உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்த மடிக் கணனி மற்றும் உப பாகங்கள் மற்றும் அளவீட்டு உபகரணங்கள் என்பன கூட்டுத்தாபனத்திற்கு மீள கையளிக்கப்பட்டமைக்கான சான்றுகள் உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஈ) பதவியில் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் போது உரிய சம்பள அளவின் ஆரம்ப அளவு வழங்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது உதவி பொது முகாமையாளர் (நிதி) பதவிக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஆரம்ப நிலையில் இருந்து 14 சம்பள ஏற்றங்கள் சேர்க்கப்பட்டு ரூபா 53,930 சம்பள அளவில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) தரக் கட்டுப்பாட்டு முகாமையாளர் பதவிக்காக 2015 நவம்பர் மாதத்தின் போது நடாத்தப்பட்டிருந்த நேர்முக பரிசோதனையின் போது ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் காணப்பட வேண்டிய தகைமை மற்றும் அனுபவத்துடன் கூடிய உத்தியோகத்தரொருவருக்கு குறைந்த புள்ளிகளை வழங்கியும் தகைமை மற்றும் அனுபவம் இல்லாத உத்தியோகத்தரொருவருக்கு கூடிய புள்ளிகளை வழங்கியும் நிரந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உதவி முகாமையாளர் சந்தைப்படுத்தல் பதவிக்காக இருக்கவேண்டிய சேவை அனுபவங்களை மாற்றி புதினப் பத்திரிகை அறிவித்தல் மூலம் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார்.

(எ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் முகாமையாளர் வழங்கல் பதவிக்கு உரிய வயதெல்லை 22 இற்கும் 45 இற்கும் இடைப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது முகாமையாளர் வழங்கல் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தரின் வயது 53 ஆக இருந்ததுடன், உரிய சம்பள அளவின் இறுதி சம்பள நிலையில் 46,655 ஆன மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் இருக்க வேண்டிய தகைமைகள் கொண்டிராத பெண் உத்தியோகத்தரொருவர் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார்.

(ஐ) பயிற்சி பெறாத தொழிலாளர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த 8 பேர் தேவையான தகைமைகள் இல்லாமல் முகாமைத்துவ உதவியாளர் மற்றும் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவிகளில் பதில் கடைமையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஒ) கூட்டுத்தாபனத்தின் மருந்து உற்பத்தி வலய ரீதியாக பிரச்சாரம் மற்றும் மேம்படுத்துவதற்கு செயற்திட்ட முன்மொழிவொன்று கிடைத்ததாகவோ அல்லது அது முறைப்படி அங்கீகரிக்கப்பட்டதாகவோ அதற்குரிய மனித மற்றும் பௌதிக வளங்கல் முறையாக தயாரிக்கப்பட்டிருந்ததாகவோ உறுதிப்படுத்துவதற்கு எழுத்து மூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், அச்செயற்பாட்டிற்காக மாதமொன்றுக்கு ரூபா 20,000 வீதம் கொடுப்பனவு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத 06 செயற்திட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். 2015 நவம்பர் முதல் 2016 யூன் 30 வரை அதில் 05 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 497,331 சம்பளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும்

அந்த உத்தியோகத்தர்கள் கூட்டுத்தாபனத்தில் சேவைக்குச் சமூகமளிக்காது அமைச்சின் சேவைக்குச் சமூகமளித்திருந்தனர்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் வரையான ஐந்தாண்டு கூட்டிணைந்த திட்டத்தில் மீளாய்வாண்டிற்குரிய இலக்குகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த கீழே விபரிக்கப்பட்டுள்ள 04 இலக்குகளை மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) பொருத்தமான கால நிலை உள்ள பிரதேசங்களில் மருந்து பயிர்ச்செய்கையை ஆரம்பித்தல், வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையொன்றாக மருந்து கன்றுகளை பயிரிடும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தலும் மற்றும் மருந்துக் கன்றுகளை பாதுகாத்தலும்.

(ஆ) ஆயுர்வேத மருத்துவ முறைமை மற்றும் உள்நாட்டு மருந்துகளின் பயன்பாடு தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுதல், ஒவ்வொரு நகரத்திலும் குறைந்தது ஒரு விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்து அவற்றில் மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளலும்.

(இ) மருந்து விற்பனை மற்றும் விற்பனை மேம்படுத்துலுக்காக சந்தையை விரிவுபடுத்தல் மற்றும் உள்நாட்டு மருத்துவ முறைமைகளை சர்வதேச ரீதியில் பிரபல்யப்படுத்துவதற்காக இணையதளத்தினை பயன்படுத்தல்.

(ஈ) மருந்துகள் விற்பனை மற்றும் விற்பனை மேம்படுத்தலுக்காக பஞ்சகர்ம சிகிச்சை நிலையங்களை ஆரம்பித்தல் மற்றும் மதவாச்சியில் புதிய தொழிற்சாலை மற்றும் மூலப் பொருட்களை சேகரிக்கும் நிலையமொன்றை ஆரம்பித்தல்.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உற்பத்திக்காக திட்டமிடப்பட்டிருந்த 10 புதிய உற்பத்தி வகைகளில் 7 மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. உற்பத்தி செய்யப்பட்ட 07 வகைகளில் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி அளவில் 73 சதவீதத்தை அடைய முடியாதிருந்தமைக்குத் தாக்கமளித்த காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் உற்பத்திக்காக திட்டமிடப்பட்ட க்வாத மற்றும் சிரப்களில் முறையே 61 சதவீதம் முதல் 76 சதவீத உற்பத்தியை அடைய முடியாது இருந்ததுடன் அதற்குத் தாக்கமளித்த காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் உற்பத்தித் திட்டத்திற்காக திட்டமிடப்பட்ட எஞ்சிய 7 மருந்து உற்பத்திகளில் 5 வகைகளின் உள்ளவாறான உற்பத்தி 42 சதவீதம் முதல் 76 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவுடன் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், அதன் உத்தம உற்பத்தியை அடைந்து கொள்வதற்கு முடியாமைக்கு தாக்கமளித்த காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கொள்வனவுத் திட்டம்

ஆகக் குறைந்தது மூன்று ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கிய பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டம், கொள்வனவுக் கைநூலின் 4.2.1 இல் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கொள்வனவு கால அட்டவணையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

கூட்டுத்தாபனத்தின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்ககுரிய ஆண்டறிக்கைகள் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டு இதுவரை திருத்தப்படுவதற்கான போதிய கவனம் மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) ஆய்வுகூட அறிக்கை மற்றும் மருத்துவக் குழு அறிக்கை மூலம் நிராகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,980,000 பெறுமதியான 4,000 கிலோ கிராம் தேன் 2012 ஜுன் மாதத்தில் தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதற்குரிய உறுதிச்சீட்டுக்கள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் குறித்த கோவைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தில் ரூபா 5,930,284 செலவில் உற்பத்தி செய்யப்படக் கூடியதாகவிருந்த 200 கிலோகிறாம் அஹ்ரக ஹஸ்ம மற்றும் நாகஹஸ்ம ரூபா 7,137,130 செலவில் இறக்குமதி செய்யப்பட்டமையால் ரூபா 1,206,846 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபன லீவு விதிக்கோவையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் நியமனம் பெற்ற முதலாவது ஆண்டில் மருத்துவ லீவுக்கு உரித்து இல்லாத போதும், உத்தியோகத்தர்களதும் ஊழியர்களதும் முதலாம் ஆண்டில் எஞ்சிய மருத்துவ லீவின் பொருட்டு 2009 முதல் 2013 வரை ரூபா 15,064,122 கூட்டுத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஊழியர்களினது கவனமின்மை காரணமாக 01283115 ஆம் இலக்க வேலைப் பத்திரத்தின் கீழ் முன்னைய ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 233,400 பெறுமதியான மதுகா பாணி அழிவடைந்திருந்தது.

## 4.6 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், அமைச்சரவையின் அங்கீகாரமின்றி கூட்டுத்தாபனத்தின் சேவையிலிலுள்ள ஊழியர்கள் அமைச்சிற்கோ அல்லது ஏனைய நிறுவனங்களுக்கோ விடுவிக்கப்பட முடியாத போதிலும், பாதுகாப்பாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த 5 உத்தியோகத்தர்கன் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் மூலம் ரூபா 562,674 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கையிருப்புக் கட்டுப்பாடு | இருப்பு மட்டம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கொள்வனவுக் கட்டுப்பாடு | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்காமை |